**செய்தி வெளியீடு எண்: 102** **நாள்: 05.02.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி,தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகம்,மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தையும், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியையும் (VVPAT) இயக்குவது குறித்த செயல்முறை விளக்க கூட்டங்களை ஏற்பாடு செய்து வருகிறது. இம் முயற்சியின் ஒரு பகுதியாக, சென்னையில் பணிபுரியும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்காக 5.2.2019 அன்று, தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது மாடியில் உள்ள கூட்ட அரங்கில்செயல்முறைவிளக்கம் நடைபெற்றது.

இக்கூட்டத்தினை அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்கள் விளக்க உரையாற்றினார். பெங்களூரு பாரத் மின்னணு நிறுவனத்தின் பொறியாளர்கள் மின்னணுவாக்குப் பதிவு இயந்திரத்தையும், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியையும் இயக்கி செயல்முறை விளக்கம் அளித்தனர். அதன் பிறகு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தையும், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியையும் (VVPAT)அலுவர்கள் தாமே இயக்கச்செய்து செயல் முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**